

பாடசாலையில் நிலச்சரிவு ஆபத்துக்கள்



நிலச்சரிவு ஆபத்துக்களுக்கு எதிரான நடவடிக்கைகள்



நிலச்சரிவு ஆபத்துக்களிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது



## உட் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து வலுவூட்டுதல்

கால நிலை மாற்றங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் காரணமாக ஆபத்து நிலைக்குள்ளாகியுள்ள நீர்த் தொகுதிகளின் உட் கட்டமைப்புகளை வெள்ளப் பெருக்கையும், வரட்சி நிலைகளையும் தாங்கக் கூடிய வகையில் விருத்தி செய்வதன் மூலம் அத் தொகுதிக-ளின் ஆபத்து நிலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இப் பணிகள் மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

1. 2010 ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சி நிலைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மகாவலி அதிகார சபைக்கும், நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குரிய நீர்ப்பாசன வடிகாலமைப்புகள், நீர் சேமிப்புத் தொகுதிகள், பராமரிப்பு மற்றும் மேற்பார்வைத் தொகுதிகள், விவசாயப் பாதைகள், சிறு பாலங்கள் மற்றும் ஏனைய நீர் உள்ளடக்கங்களை ஐக்கிய அமெரிக்க டொலர் 73 மில்லியன் செலவில் விருத்தி செய்வதன் மூலம் அவற்றுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து நிலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2. வீதி அபிவிருத்தி அதிகார சபையும், ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையும் கூட்டிணைந்து ஐக்கிய அமெரிக்க டொலர் 49 மில்லியன் செலவில் வீதி வலையமைப்பிலுள்ள மண் சரிவு அபாய நிலையுள்ள இடங்களை மண் சரிவு அபாய நிலையைத் தாங்கக் கூடிய அடிப்படையில் கட்டியெழுப்புவதற்கும், நீரோட்டத்துக்கு தடையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலங்களையும், மதகுகளையும் நீரோட்டத்துக்குத் தடையேற்படாதவாறு புதுப்பிப்பதற்கும், வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவு காரணமாகப் போக்குவரத்து சேவைகளுக்குத் தொடர்ச்சியாக ஏற்படக் கூடிய தடைகளைக் குறைப்பதற்குமென புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட வண்ணமுள்ளன.

3. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 7 மில்லியன் செலவில் அபாய நிலைக்குறிய மலைச் சரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள 18 பாடசாலைகளை ஆபத்து நிலைகளிலிருந்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.



## அவசர அனர்த்த நிலைக்கான முன் ஆயத்தம்

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்படக் கூடிய திடீர் ஆபத்து நிலைகளுக்கு முகங் கொடுத்து மீள் நிலைப்படுத்தும் திறனை வலுவூட்டுவதற்கென ஐக்கிய அமெரிக்க டொலர் 3 மில்லியன் நிதியம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவு காரணமாகக் களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அழிவடைந்த பாதைகள் இனங் காணப்பட்டு புனரமைக்கப்பட்டன.

## செயற்திட்ட முகாமைத்துவம்

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்திட்ட முகாமைத்துவத்துக்கென நிலை நாட்டப்பட்டுள்ள செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) செயற்திட்டத்தின் ஏனைய பங்குதாரிகளுடன் ஒன்றிணைந்து செயற்திட்டத்தை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

---

ஆபத்துகளை இயன்றளவில் குறைப்பதற்கென மிகச் சிறந்த வழிமுறைகளை இனங் கண்டு அவற்றைத் துரிதமாகவும், சந்தர்ப்பத்துக்கேற்ற அடிப்படையிலும் செயற்படுத்துவதன் மூலம் கால நிலை மாற்றங்களினால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை மீண்டும் ஏற்படாமல் தடுக்கலாம்.

கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம் இதற்கென உங்களது அதியுயர் பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் எதிர்ப்பார்க்கின்றது.

கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம்
நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
இல 11 , ஜாவத்த வீதி, கொழும்பு 05
தொலைபேசி - 0112058451, இணைய தளம் - www.crip.lk



# அவ் ஆபத்துக்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு

கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம்
நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

# கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம் CRIP

கால நிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய அனர்த்தங்களுக்கு அதிகளவில் இலக்காகும் நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. கடந்த தசாப்தங்களில் கால நிலை மாற்றங்களினால் ஏற்படக் கூடிய பாதகமான தாக்கங்கள் நாட்டின் கடற் சார் பிரதேசங்களையும், ஆறுகளுக்கு அண்மித்த பிரதேசங்களையும், மலை நாட்டுப் பிரதேசங்களையும், உலர் வலயப் பிரதேசங்களையும் பாரியளவில் பாதித்துள்ளன. இந் நிலை அப் பிரதேசங்களில் வாழும் பொது மக்களது அன்றாட வாழ்க்கையில் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு வருடாந்தம் பெருமளவில் பாதிப்புகள் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென 2014 ஆம் ஆண்டு கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இக் செயற்திட்டம் நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள அரசுக்குரிய செயற்திட்டமொன்றாகக் காணப்படுகின்றது. கால நிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தங்களுக்கும், அழிவு நிலைகளுக்கும் முகங் கொடுப்பதற்குத் தேவையான தீர்வுகளை இனக் காண்பதற்கென திட்டங்களை உருவமைக்கும் பணிகளும், அவற்றைச் செயற்படுத்தும் பணிகளும் செயற்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன.

இக் செயற்திட்டம் உலக வங்கியினால் வழங்கப்படுகின்ற ஐக்கிய அமெரிக்க டொலர் 152 மில்லியனான நிதியியல் முதலீட்டுடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்படுகின்றது. செயற்திட்டத்தின் முதல் கட்டம் மிகப் பரந்தளவிலான இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. அந் நோக்கங்களாவன

- கால நிலை மாற்றங்களினால் ஏற்படக் கூடிய வரட்சி நிலை, வெள்ளப் பெருக்கு நிலைக்கும் முகங் கொடுத்துள்ள உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் ஏற்படக் கூடிய பாதிப்புகளையும், அழிவுகளையும் இயன்றளவில் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அத்தகைய அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கக் கூடிய திறனை விருத்தி செய்தல்.



## செயற்திட்டத்தின் பிரதான பங்குதாரிகள்




## செயற்திட்டத்தின் உள்ளடக்கங்கள்

கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டமானது 04 பிரதான உள்ளடக்கங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. அவ் உள்ளடக்கங்களாவன

- ஆற்றுப் படுக்கை அபிவிருத்தி முதலீட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்
- உட் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து அவற்றை வலுவூட்டுதல்
- திடீர் அனர்த்தங்களுக்கான மிகப் பொருத்தமான ஆயத்தம்
- கருத்திட்ட முகாமைத்துவம், பகுப்பாய்வு மற்றும் பின்னாய்வு

## ஆற்றுப் படுக்கை அபிவிருத்தி முதலீட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்

அண்மைக் காலமாகப் பரந்தளவில் ஏற்பட்டுள்ள வண்ணமுள்ள திடீர் கால நிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தங்களின் மூலம் சமூகத்துக்கும், பொது மக்களது வாழ்க்கைக்கும், சொத்துக்களுக்கும் ஏற்படக் கூடிய அழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வரட்சி நிலை மற்றும் வெள்ளப் பெருக்கு அனர்த்தங்களுக்கென வருடாந்தம் ரூபா 55,000 மில்லியனான பணத் தொகையை அரசு செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இக் காரணங்களால் அனர்த்தங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தக் கூடிய அபாய நிலையுள்ள 10 ஆற்றுப் படுக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை அவ் அபாய நிலைகளுக்கு நீண்ட காலமாக முகங் கொடுப்பதற்குத் தேவையான ஆற்றுப் படுக்கை அபிவிருத்தித் திட்டங்கள் செயற்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ளன. அத் திட்டங்கள் செயற்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் 13 மில்லியன் செலவில் தயாரிக்கப்படுவதுடன், தயாரிக்கப்படுகின்ற திட்டங்கள் முன்னுரிமை ரீதியிலும், நிதி முதலீட்டுத் திறனுக்கு அமையவும் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தேர்ந்தெடுக்கப்பட்ட ஆற்றுப் படுக்கைகள்

1 களனி கங்கை
2 அத்தனகலு ஒய
3 மகாவலி ஆறு
4 கலா ஓய
5 தெதுரு ஓய
6 மஹ ஓய
7 கிங் கங்கை
8 நில்வலா கங்கை
9 மல்வது ஒய
10 கல் ஓய



ஆற்றுப் படுக்கை அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், அது இரண்டு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. முதல் கட்டத்தின் கீழ் களனி கங்கை, அத்தனகலு ஒய, மகாவலி கங்கை, கிங் கங்கை, நில்வலா கங்கை, மல்வது ஒய ஆற்றுப் படுக்கைகளுடன் மேலதிகமாக முந்தெனி ஆற்றுப் படுக்கைகளுக்கும் அதியுயர் முன்னுரிமை வழங்கிய வண்ணம் 7 ஆற்றுப் படுக்கைகளுக்கான திட்டங்கள் தயாரிக்கப்படும். பிற்பாடு எஞ்சிய 4 ஆற்றுப் படுக்கைகளுக்குமான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

## களனி கங்கை வெள்ளப் பெருக்கு மற்றும் ஆறு தொடர்பான ஆய்வுகள்

2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நிலையைக் கருத்திலெடுத்து களனி கங்கை ஆற்றுப் படுக்கைக்கான திட்டங்கள் விரைவில் தயாரிக்கப்பட்டன. இதன் கீழ் களனி ஆறுடன் தொடர்புடையதாகத் தொடர்ச்சியாக ஏற்படக் கூடிய வெள்ளப் பெருக்கு அனர்த்த நிலையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். களனி

- சூழல் ஆய்வுகளை மேற்கொள்ளல்,
- நீர் சார் புவியியல் ஆய்வுகளை மேற்கொள்ளல்,
- சமூக, பொருளாதார உபாய வழி கணிப்பீடுகளை மேற்கொள்ளல்,
- உபாய வழி சமூகவியல் ரீதியான கணிப்பீடுகளை மேற்கொள்ளல்,
- வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக் கட்டுக்களை நிர்மாணிக்கக் கூடிய திறனைக் கண்டறிதல்,
- ஆற்றிலுள்ள தடைகளை அகற்றுவதற்கும், தடைகளை ஏற்படுத்தக் கூடிய இடங்களை விஸ்தீரணப்படுத்துவதற்குமுள்ள சாத்தியக் கூற்றைக் கண்டறிதல்,
- உயர் நீரேந்துப் பிரதேசங்களில் நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கக் கூடிய திறனைக் கண்டறிதல்,
- மீள் குடியேற்றச் செயற்பாட்டைத் திட்டமிடுவதுடன் தொடர்புடைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன.

இவ் ஆய்வுகளின் அடிப்படையில் வெள்ளப் பெருக்கு அனர்த்த நிலையைக் குறைப்பதற்கெனப் பொருளாதார ரீதியில் வினைத் திறன் மிக்க நடைமுறையில் சாத்தியமுள்ள செயற்பாடுகள் இனங் காணப்படுவதுடன், செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் அத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுமுள்ளன.

